# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்)

**2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*நிதி அமைச்சர் அவர்களால் 2016, செத்தெம்பர் மாதம் 07 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது.*

*(2016, ஓகத்து மாதம் 19 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***135 ஆம் சட்டமூலம்*** ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 11.00*** ***தபாற் செலவு : ரூபா 10.00***

2-PL 010182 - 475 (2016/09)

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது :-

(அ) 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான உற்பத்தித் தீர்வை மற்றும் 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின்கீழான ஆயவரி என்பவற்றின் கொடுப்பனவுக்கு அமைந்தனவாகவுள்ள குறித்த சில பொருட்களுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்பை, முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழான நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிக்கும் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் கீழான சேர்பெறுமதி வரிக்கும் பதிலாக அத்தகைய தீர்வையைச் செலுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள பொருட்களுக்கு வரையறுப்பதாகும் ;

(ஆ) குறித்தசில வகுதியினரான ஆட்கள் தொடர்பில் அப்பிரிவின்கீழ் விதிக்கப்படற்பாலதான பொறுப்பாக்கப்படக்கூடிய மொத்த விற்பனவு வரவின் எல்லைகளை வேறுபடுத்துவதாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் எந்தக் குறித்தசில வகுதியினரான ஆட்கள் தொடர்பில் வரிமதிப்பீடுகள் அல்லது மேலதிக வரிமதிப்பீடுகள் செய்யப்படலாகாதோ அந்தக் குறித்தசில வகுதியினரான ஆட்களைக் குறித்துரைப்பதாகும்.

**வாசகம் 4 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, குறித்தசில பொருட்கள் தொடர்பான விலக்களிப்புகளின் ஏலவேயுள்ள கட்டளைக்கற்களின் மீளாய்வுக்காக ஏற்பாடுசெய்வதாகும்.

**வாசகம் 5 :** இவ்வாசகம் செல்லுபடியாக்குதல் வாசகமொன்றை அறிமுகப்படுத்துகின்றதென்பதுடன் அதன் சட்டப்பயனானது, அதில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் இச்சட்டம் ஏற்புடையதாகும் ஆட்களிடமிருந்து இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கணிக்கப்பட்டதும் முதன்மைச் சட்ட்வாக்கத்தின் முறையே 4 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின்கீழ் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி மற்றும் சுங்கப்பணிப்பாளர் தலைமையதிபதியினால் சேகரிக்கப்பட்டதுமான குறித்த சில வரிகளை செல்லுபடியாக்குவதற்கும் மேலும் மேலே சொல்லப்பட்டவாறாக சேகரிக்கப்பட்ட ஏதேனும் அத்தகைய வரி தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் தீர்மானம் அல்லது கட்டளை அல்லது ஏதேனும் நீதிமன்றம் முன்னாலான ஏதேனும் முடிவுறா வழக்கு நடவடிக்கையை அத்தகைய ஏற்பாடுகள் பாதித்தலாகாது என ஏற்பாடு செய்வதற்குமாகும்.

ச. வ. ஓ. 28/2016

**2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், இதன்கீழ் வெவ்வேறு நடைமுறைக்கு வரும் தேதிகள் குறித்துரைக்கப்பட்டாலொழிய, 2016 சனவரி 1 ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும். சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**2.** இரண்டாயிரத்துப் பதினைந்தாமாண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :- 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (iv) ஆம் பந்தியில் -

(அ) அதன் (11) ஆம் உட்பந்தியில், "1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் இறக்குமதியின் போது" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "இச்சட்டத்தின் கீழான நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிக்கும் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் கீழான சேர்பெறுமதி வரிக்கும் பதிலாக 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் இறக்குமதியின்போது" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ;

(ஆ) அதன் (12) ஆம் உட்பந்தியில், "1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான ஆயவரி" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "இச்சட்டத்தின்கீழான நாட்டைக் கட்டியெழுப்பு தல் வரிக்கும் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின்கீழான சேர்பெறுமதி வரிக்கும் பதிலாக 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான ஆயவரி, என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ;

(இ) அதன் (13) ஆம் உட்பந்தியில், "1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான ஆயவரி" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "இச்சட்டத்தின்கீழான நாட்டைக் கட்டியெழுப்பு தல் வரிக்கும் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின்கீழான சேர்பெறுமதிவரிக்கும் பதிலாக 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான ஆயவரி" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (iii) ஆம் பந்தியில் -

(i) அதன் (ஆ) என்னும் உட்பந்தியில், "ஆனால் 2015, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் முடிவுறும் அத்தகைய இயைபான காலாண்டாயிருப்பின் முப்பது இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத தொகை ; அத்துடன்" என்னும் சொற்களுக்கும்

எண்களுக்கும் பதிலாக "ஆனால் 2015, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் முடிவுறும் அத்தகைய இயைபான காலாண்டாயிருப்பின் முப்பது இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத தொகை"; என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ii) அதன் (இ) என்னும் உட்பந்தியில், "2015, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டின் அத்தகைய இயைபான காலாண்டாயிருப்பின் முப்பது இலட்சத்து எழுநூற்று ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்படாத தொகை;'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2015, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டின் அத்தகைய இயைபான காலாண்டாயிருப்பின் முப்பது இலட்சத்து எழுநூற்று ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்படாத தொகை; அத்துடன்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(iii) அதன் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(ஈ) அத்தகைய இயைபான காலாண்டு 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டாயிருப்பின் முப்பது இலட்சம் ரூபாவான பணத்தொகை:

ஆயின், 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற காலாண்டுக்காக எந்த ஆளின் பொறுப்பாக்கப்படக்கூடிய மொத்த விற்பனை வரவு முப்பது இலட்சம் ரூபாவை விஞ்சுவதுடன் முப்பது இலட்சத்து எழுநூற்று ஐம்பதினாயிரம் ரூபாவான பணத் தொகையை விஞ்சாதுள்ளதோ அந்த எவரேனுமாளின் விடயத்தில், அத்தகைய ஆளுக்கு 2016, மே 2 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் திரண்ட பொறுப்பாக்கப்படக்கூடிய மொத்த விற்பனவு வரவின் மீது மட்டுமே வரிவிதிக்கப்படற்பால தாதல் வேண்டும்;"; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (iv) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(iv) அத்தகைய காலாண்டு -

(**அ**) 2011, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற காலாண்டாயிருப்பின், மற்றும் -

(அ) ஒரு ஹோட்டலை, அதிதி மனையை, சிற்றுண்டிச்சாலையை அல்லது வேறு ஒத்த தொழிலை நடாத்துவதிலிருந்து ;

(ஆ) விற்பனைக்காக ஆயத்தஞ் செய்வதில் உள்நாட்டில் பெறப்பட்ட ஏதேனும் கமத்தொழில்சார் உற்பத்திப் பொருளைப் பதனிடுவதிலிருந்து ;

(இ) அந்நோக்கத்துக்காக உள்நாட்டில் தாபிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தினால் கல்விச் சேவைகள் வழங்கப்படுவதிலிருந்து ; அல்லது

(ஈ) தொழிலாளரை (மனித வலுவை) வழங்குவதிலிருந்து,

அத்தகைய ஆளின் பொறுப்பாக்கப்படக்கூடிய மொத்த விற்பனவுவரவு இருபத்தைந்து மில்லியன் ரூபாவான பணத்தொகையை விஞ்சாதிருப்பின் :

ஆயின், 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற காலாண்டுக்காக உட்பந்திகள் (அ), (இ) மற்றும் (ஈ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் தொழிலிலிருந்து எந்த ஆளின் பொறுப்பாக்கப்படக்கூடிய மொத்தவிற்பனவுவரவு முப்பது இலட்சம்ரூபாவை விஞ்சுவதுடன் இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாதுள்ளதோ அந்த எவரேனும் ஆளின் விடயத்தில், அத்தகைய ஆளுக்கு 2016, மே 2 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் திரண்ட பொறுப்பாக்கப்படக்கூடிய மொத்த விற்பனவு வரவின் மீது மட்டுமே வரிவிதிக்கப்படற்பாலதாதல் வேண்டும் ;

(ஆ) *2016, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற காலாண்டாயிருப்பின் மற்றும் விற்பனைக்காக ஆயத்தம் செய்வதில் உள்நாட்டில் பெறப்பட்ட ஏதேனும் கமத்தொழில்சார் உற்பத்திப் பொருளைப் பதனிடுவதிலிருந்து அத்தகைய ஆளின் மொத்தவிற்பனவுவரவு முப்பது இலட்சம் ரூபாவை விஞ்சுவதுடன் இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாதிருப்பின்;".*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3**. இரண்டாயிரத்தொன்பதாம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலம் மேலும் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(உ) வரிமதிப்பீடு அல்லது மேலதிக வரிமதிப்பீடெதுவும்-

(i) *2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 106 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (7) ஆம் உட்பிரிவின்கீழ் அவரது வருமானம்பற்றிய விபரத்திரட்டு கொடுத்துவப்பட்டிருப்பின், இப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் வரிமதிப்பீட்டாண்டில் இயைபான காலாண்டுக்காக, அத்தகைய இயைபான காலாண்டு எந்த வரிமதிப்பீட்டாண்டில் வருகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் வரிமதிப்பீட்டாண்டின் நவம்பர் 30 ஆம் நாளிலிருந்து பதினெட்டு மாதங்கள் முடிவுற்றபின்னர் அவ்விபரத்திரட்டைக் கொடுத்துதவியுள்ளவரான ; அல்லது*

(ii) *அத்தகைய இயைபான காலாண்டு எந்த வரிமதிப் பீட்டாண்டினுள் வருகின்றதோ அந்த வரிமதிப்பீட் டாண்டை உடனடுத்துவரும் வரிமதிப்பீட்டாண்டின் நவம்பர் முப்பதாம் நாளிலிருந்து நான்காண்டுகள் முடிவுற்றபின்னர், இப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அவ்விபரத் திரட்டைக் கொடுத்துதவத் தவறியுள்ளவரான,*

*எவரேனுமாள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் செய்யப்படுத லாகாது.*”.

*முதன்மைச் சட்டவாக் கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**4.** *இரண்டாயிரத்துப் பதினைந்தாமாண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-*

(1) *அவ்வட்டவணையின் பாகம்* I *இல் :-*

(அ) *அதன்* (xi) *ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :-*

“(xi) *2016, மே 2 ஆந்தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக, சுங்க நோக் கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபாரப்பொருள் விவரணம் மற்றும் கோவையிடும் இலக்கங்களின்கீழ் வகுப் பாக்கம்செய்யப்பட்ட பெற்றோலியம்மற்றும் பெற்றோலிய உற்பத்திப்பொருள் கள்;*”;

(ஆ) *அதன்* (xvi) *ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின் வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :-*

"(xvi) நாட்டுக்கான பொருளாதார நன்மையைக் கவனத்துட்கொண்டும் மற்றும் அரசாங்கத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டு நிதிகளிலிருந்து அல்லது நன்கொடைகளிலிருந்து கொண்டு நடாத்தப்படும், 2016, மே 2 ஆந் தேதிக்கு முன்னர் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவாறு, ஏதேனும் வீடமைப்புக் கருத்திட்டம் தவிர்ந்த குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்துக்கு இறக்குமதி செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எவையேனும் பண்டங்கள் ;";

(இ) அதன் (XLVIII) ஆம் விடயத்தில், "1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரிச் சட்டத்தின்கீழ் இறக்குமதியின் போது" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "இச்சட்டத்தின்கீழான நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிக்கும் 2002 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டத்தின் கீழான சேர்பெறுமதி வரிக்கும் பதிலாக 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் இறக்குமதியின் போது" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(ஈ) அதன் (XLIX) ஆம் விடயத்தில், "1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின்கீழான ஆயவரி" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "இச் சட்டத்தின் கீழான நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிக்கும் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டத்தின்கீழான சேர்பெறுமதிவரிக்கும் பதிலாக, 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான ஆயவரி" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(உ) அதன் (L) என்னும் விடயத்தில், "கட்டளைச் சட்டத்தின் கீழ் விடயத்திற்கேற்ப," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கட்டளைச் சட்டத்தின் கீழான நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிக்கும் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின்கீழான சேர்பெறுமதிவரிக்கும் பதிலாக, "விடயத்திற்கேற்ப," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அவ்வட்டவணையின் பாகம் II இல்-

(அ) அதன் (ii) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :-

"(ii) 2016, மே 2 ஆந்தேதிக்கு முன்னர் முடிவடைந்த ஏதேனும் காலப்பகுதிக்காக மின்சாரம் வழங்குதல்;"; அத்துடன்

(ஆ) அதன் (xxviii) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :-

"(xxviii) 2016, மே 2 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைந்த ஏதேனும் காலப்பகுதிக்காக, 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்புகள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான தொலைத்தொடர்புகள் அற வீட்டுக்குப் பொறுப்பாக்கப்படக்கூடிய தொலைத் தொடர்புச் சேவைகளும், அச்சட்டத்தில் தொலைத்தொடர்புச் சேவைகளுக்கு வரைவிலக்கணம் கூறுவதில் அத்தகைய பொறுப்பிலிருந்து விசேடமாகத் தவிர்க்கப்பட்ட சேவைகளும் ;".

செல்லுபடி யாக்குதல்.

**5**. விடயத்துக்கேற்ப, உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி, முதன்மைச் சட்டவாக்கத்தின் முறையே 4 ஆம் பிரிவின் அல்லது 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எந்த ஆளுக்கு ஏற்புடையனவோ அந்த ஆளொருவரிடமிருந்து, 2016, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றிதழ் எந்தத் தேதியன்று புறக்குறிப்பிடப்படுகின்றதோ அந்தத் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கவனத்துட்கொண்டு கணக்கிடப்பட்ட வரியைச் சேகரிக்குமிடத்து, அத்தகைய சேகரிப்பு, எல்லா நோக்கங்களுக்காகவும், செல்லுபடியானமுறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், இப்பிரிவின் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள், மேற்கூறப்பட்ட காலப்பகுதியின்போது சேகரிக்கப்பட்ட ஏதேனும் வரி தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபை அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள ஏதேனும்வழக்கு நடவடிக்கையைப் பாதித்தலாகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**6**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்